தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள், சென்னை–6

ந.க.எண். 043571 /அ2/இ2/14 நாள் 10 .07.2014

-----

பொருள் நிர்வாகம் – தமிழ்நாடு அமைச்சுப் பணி – பணிவரன்முறை – திருமதி.சீ.வீரநாகஜோதி , தட்டச்சர் - தட்டச்சர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல் – சார்ந்து.

பார்வை
1. தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள் ந.க.எண்.15664/அ4/இ1/2013 நாள் 25.02.2013
2. அரசுத் தேர்வுகள் இயக்கக S.S.L.C.உண்மைத்தன்மை அறிக்கைகள் கடித.ஓ.மு.எண்.033572/வி5/2013 நாள் 10.03.2014
3. சென்னை–25, தொழில்நுட்ப கல்வி இயக்குநரின் கடித ந.க.எண் ஓ.மு.எண்.113587/ட்டி3/2013 நாள் 3.11.2013
4. சம்பந்தப்பட்ட பணியாளரின் பணிப்பதிவேடுகள் மற்றும் கோப்புகள்

-----

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தொகுதி–4, தேர்வின்படி தேர்வு செய்யப்பட்டு பார்வை –1ல் காண் செயல்முறைகளின்படி இவ்வியக்ககத்தில் தட்டச்சராகப் பணிபுரியும் திருமதி.சீ.வீரநாகஜோதி என்பார் தட்டச்சர் பதவியில் பணியில் சேர்ந்த நாளன்று பணிவரன்முறை செய்யும் பொருட்டு அப்பணியாளரின் எஸ்.எஸ்.எல்.சி கல்விச் சான்று மற்றும் தட்டச்சுக் கல்விச் சான்று ஆகியவற்றின் உண்மைத் தன்மையினை அறிக்கை கோரி சம்பந்தப்பட்ட இயக்ககத்திற்கு அனுப்பப்பட்டது.

பார்வை – 2 ல் காண் அரசுத் தேர்வு இயக்குநரின் கடிதத்தில், அன்னாரது S.S.L.C. சான்றிதழ்கள் உண்மைத்தன்மை வாய்ந்தது என அறிக்கை பெறப்பட்டுள்ளது.

பார்வை – 3ல் காண் தொழில்நுட்பக் கல்வி இயக்குநரின் கடிதம் வாயிலாக தட்டச்சு கல்வித்தகுதிச் சான்றின் உண்தைத்தன்மை அறிக்கை பெறப்பட்டுள்ளது.

இவ்வுண்மைத் தன்மை அறிக்கையின் அடிப்படையிலும், தமிழ்நாடு அமைச்சுப்பணி விதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறும், கீழ்க்காண் நிபந்தனைகளின் அடிப்படையிலும் இப்பணியாளருக்கு தட்டச்சர் பதவியில் பணியில் சேர்ந்த நாளன்று கீழ்க்கண்டவாறு பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

| தேர்வாணையப் பட்டியலின் வரிசை எண். | பெயர் மற்றும் பதவி திரு/திருமதி | நியமன முறை | கல்வித் தகுதி | தட்டச்சர் பதவியில் நியமன நாள் | தட்டச்சர் பதவியில் பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 66 | சீ.வீரநாகஜோதி | தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் தொகுதி–4 மூலம் | S.S.L.C | 01.03.2013 மு.ப. | 01.03.2013 மு.ப. |

1. தட்டச்சர் பதவியில் பணிவரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து தொடர் மூன்றாண்டு பணிக்காலத்திற்குள் இரண்டாண்டுகள் பூர்த்தி செய்த பின்னரே தட்டச்சர் பதவியில் தகுதிகாண் பருவம் முடித்து ஆணை வழங்கப்படும்.
2. பணிவரன்முறை செய்யப்பட்ட இரண்டாண்டு பணிக்காலத்திற்குள் கணினி கல்வித் தகுதியை ( Certificate course in Computer on "Office Automation" awarded by the Directorate of Technical Education) தவறாமல் நிறைவு செய்யப்பட வேண்டும்.
3. உயர்நிலைப் பள்ளிப் படிப்பில் தமிழை மொழிப்பாடமாகவோ அல்லது கற்பிப்பு மொழியாகவோ பயிலாமல் இருப்பின் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையக் குழுமத்தால் நடத்தப்படும் தமிழ் இரண்டாம் நிலைத் தேர்வில் பணிவரன் முறை செய்த நாளிலிருந்து இரண்டாண்டிற்குள் தேர்ச்சி பெற வேண்டும்.
4. தட்டச்சர் பதவியில் தகுதிகாண் பருவம் முடிக்கப்பட்ட பின்னரே இரண்டாவது மற்றும் தொடர் ஊதிய உயர்வுகள் வழங்க இயலும்.

இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) 7/36

15/1

பெறுநர்
சம்பந்தப்பட்ட தட்டச்சர்,
நகல் – பணிப்பதிவேட்டிற்கு